செய்தி வெளியீடு எண்: 55

நாள்: 23.01.2021

<u>மீன்வளத்துறை</u>

<u>செய்திகுறிப்பு</u>

**சென்னை மீன்பிடி துறைமுகத்தில் மாண்புமிகு மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் 22.01.2021 அன்று ஆய்வு**

சென்னை மீன்பிடி துறைமுகம் சென்னை மாவட்டத்தில் காசிமேடு கடற்கரை பகுதியில் 1985 ஆம் ஆண்டு 575 இயந்திர மீன்பிடி படகுகளை கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டது. இத்துறைமுகம் படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டு தற்போது 1000 ஆழ்கடல் மீன்பிடி இயந்திர விசை படகுகள் மற்றும் 1370 இயந்திரம் பொருத்தப்பட்ட பைபர் மீன்பிடி படகுகள் நிறுத்துவதற்கு ஏற்றவாறு மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த பத்தாண்டுகளில் (2010 முதல் 2020 முடிய) இத்துறைமுகத்தில் ரூபாய் 108.07 கோடி மதிப்பீட்டில் துறைமுக விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு பணிகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தில் முதன்மை படகு அணையும் தளம் 500 மீட்டர் நீளத்திற்கும், கூடுதல் முதன்மை படகு அணையும் தளம் 450 மீட்டர் நீளத்திற்கும், மீன் ஏலக்கூடம் ஒன்றும், கூடுதல் இருபுற படகு அணையும் தளங்கள் 700 மீட்டர் நீளத்திற்கும், துறைமுகத்தின் தென் பகுதியில் 168 நவீன மீன் விற்பனை நிலையங்களும் கட்டப்பபட்டுள்ளன.

இந்த மீன்பிடி துறைமுகத்தில் தினந்தோறும் சுமார் 200 மெட்ரிக் டன் அளவு மீன்கள் கையாளப்படுகிறது. இதில் சுமார் 30 விழுக்காடுகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது.

இத்துறைமுகத்தில் நாளுக்கு நாள் ஏற்படும் வளர்ச்சியின் காரணமாக படகுகள் நிறுத்துமிடங்களில் நெரிசல் அதிகமாக இருப்பதாலும் மீன்கள் சில்லறை விற்பனை பகுதியில் கூட்ட நெரிசல் அதிகமாக இருப்பதாலும், துறைமுகத்திற்கு உள்ளே வரக்கூடிய அணுகு சாலைகள் மிகவும் பழுதடைந்து இருப்பதாலும், புதிய சாலைகள் அமைத்தும், துறைமுகத்தின் உட்பகுதியில் மீன்களை பதப்படுத்த குளிரூட்டப்படும் நிலையங்கள், பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் அமைக்கவும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ. 120 கோடி மதிப்பீட்டில் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் துறைமுகத்தின் கிழக்கு பகுதியில் 300 மீட்டர் நீளத்திற்கு புதியதாக படகு அணையும் தளம் கட்டுவதற்கும், இருபுற படகு அணையும் தளம் (ஜெட்டி) 150 மீட்டர் நீளத்திற்கு புதியதாக கட்டுவதற்கும், கீழ்மட்ட படகு அணையும் தளம் 100 மீட்டர் நீளத்திற்கு புதியதாக கட்டுவதற்கும், உயர் ரக மீன்களை சுத்திகரிப்பு செய்யவும், பொதுமக்கள்

பயன்பாட்டிற்கு கட்டிட வளாகம் அமைத்து கடைகள், உணவகம், ஓய்வறை, வணிக வளாகம் மற்றும் மருத்துவ சேவை மையம் அமைக்கவும், துறைமுகத்தின் தென் பகுதியில் நவீன வசதிகளுடன் 120 சில்லறை விற்பனை கூடங்கள் அமைக்கவும், படகுகள் பழுது பணிமனை அமைக்கவும், நவீன வசதிகள் கொண்ட இணையதளம், கணினி மூலம் இயங்கக்கூடிய ஒருங்கிணைந்த கணினி கட்டுப்பாட்டு மையம், விசை படகுகள் செல்வதை கண்காணிக்கும் மையம், தானியங்கி தட்ப வெப்ப நிலையங்கள், துறைமுகத்தின் வளாகத்தில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல் மற்றும் சூரிய ஒளியில் இயங்கக்கூடிய சூரிய மின் விளக்குகள் பொருத்துதல் போன்ற மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவும் திட்ட அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திரு. கிரிராஜ்சிங் மாண்புமிகு மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் இன்று (22.01.2021) காலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை அவர்களது இல்லத்தில் சந்தித்தார்கள். அந்த சந்திப்பின்போது திரு.டி. ஜெயக்குமார், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர், திரு. உடுமலை.கே. இராதாகிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, மாண்புமிகு பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித்துறை அமைச்சர் ஆகியோரும் உடனிருந்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களிடம் சென்னை மீன்பிடி துறைமுகம் விரிவாக்கம் செய்வதின் அவசியம் பற்றியும், எதிர்கால தேவைகளுக்கு சென்னை மீன்பிடி துறைமுகத்தில் மேம்பாட்டு பணிகள் செய்வது மிகவும் அவசியம் எனவும் எடுத்துரைத்தார்கள்.

மாண்புமிகு மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் இன்று (22.01.2021) முற்பகல் காசிமேட்டில் உள்ள சென்னை மீன்பிடி துறைமுகத்தை ஆய்வு செய்தார்கள். ஆய்வின்போது, திரு.ராஜீவ்ரஞ்சன், இ.ஆ.ப, மத்திய மீன்வள செயலர், டாக்டர். பாலாஜி, இ.ஆ.ப, மத்திய இணை செயலர் ஆகியோரும் உடனிருந்தனர் ஆய்வின்போது டாக்டர். கே. கோபால், இ.ஆ.ப. முதன்மை செயலர், தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அவர்கள் சென்னை மீன்பிடித் துறைமுகத்தின் தற்போதைய கட்டமைப்புகளின் நிலை குறித்தும், மேற்கொண்டு மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் மேம்படுத்துவதால் மீனவ சமுதாயத்திற்கு ஏற்படும் நன்மைகள், வாழ்வாதாரம் மேம்பாடு, கூடுதல் வேலைவாய்ப்பு, மற்றும் அன்னிய செலவாணி மேம்படுதல், குறித்தும் தெளிவாக தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு மத்திய மீன்வளம், கால்நடை

பராமரிப்பு மற்றும் பால்வளம் அமைச்சர் இம்மேம்பாடு திட்டம் குறித்து பரிசீலிப்பதாக தெரிவித்தார்கள்.

மாண்புமிகு மத்திய மீன்வளம் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்கள், சென்னை மீன்பிடி துறைமுகத்தில் ஆய்வு பணி மேற்கொள்ளும் போது தமிழக அரசின் முதன்மை செயலாளர், கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, செயலாளர் மீன்வளத்துறை மத்திய அரசு, இணை செயலாளர், மத்திய அரசு மற்றும் திரு.ஜெ.ஜெயகாந்தன், இ,ஆ,ப, ஆணையர் மீன்வளத்துறை, திரு.வீ.இராஜு, தலைமை பொறியாளர், திருமதி.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப, சென்னை மாவட்ட ஆட்சியர். திரு.பாலாஜி, துணை தலைவர், சென்னை துறைமுக பொறுப்புக் கழகம், மீனவர் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9